Registered No. M. 1953.] [வருடசந்தா ரூ. 1—0—0

உ

ஆண்டவிநாயகர் துணை.

" குண நிதி. "

திருவிடைமருதூரினின்று வெளியாகும்

ஓர் மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை.

"GUNA NIDHI."

மலர். 1 { குரோதன-ஞு வைகாசி மீ } இ 12.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	கடவுள் துதி. ...	221
2.	பாரத கீதம். ...	,,
3	உயூர்வு ...	223
4.	தாய்மொழியை வளர்த்தல்...	225
5.	நம்மாழ்வாரவாது திருச்சீர்த்தொடை.	230
6.	வெற்றிக்குரிய வழிகள் ...	231
7.	தொண்டைமான் இளந்திரயன்	233
8.	இராஜராஜேஸ்வரி ...	235
9.	பொதுக்குறிப்புகள் ...	237

பத்திராதிபர்,
ம. சோ. பிச்சை[illegible]
திருவிடைமருதூர்.

குணநிதியின்

போஷகர்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்.

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ காசி வாசி சுவாமிகள் அவர்கள்

ஆதீனகர்த்தர்கள், திருப்பனந்தாள்.

ஜீவியசந்தாதார்கள்

ஸ்ரீலஸ்ரீ தரு. ஞா. ஷண்முகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,

தேவஸ்தானம் விசாரணை வேளூர்

ஸ்ரீலஸ்ரீ குஞ்சிதபாதத்தம்பிரான் அவர்கள்,

தருமபுரம் ஆதீனம்.

ஸ்ரீமான் K. V. மாணிக்கம்பிள்ளை அவர்கள்

மிராசுதார், குடவிளாகம்

குணநிதி

சந்தா விபரம்.

		ரூ. அ. ப
வருடம் 1-க்கு தபால் கூலி யுள்பட	உள்நாட்டிற்கு	1—0—0
	வெளிநாடுகளுக்கு	1—4—0
	தனி சஞ்சிகை விலை	0—2—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஆயுள் சந்தா.	உள்நாடு	ரூபா. 15—0—0
	வெளிநாடு	20—0—0
வருடம் ஒன்றுக்கு	அபிமானிகளுக்கு	ரூபா. 25—0—0
	போஷகர்களுக்கு	,, 50—0—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு		ரூபா	6—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	,,	3—8—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—0—0

முன் பணம் இன்றி விளம்பரஞ்செய்யப்படமாட்டாது.

"குணநிதிப்" பிரசுரசாலை, திருவிடைமருதூர்.

உ

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குண நிதி.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருக்குறள்.

(All Rights Reserved.)

மலர் க } குரோதன ௵ வைகாசி ௴ -க௳ { இதழ் கஉ
1925-௵ மே ௴ - 14௳

திருச்சிற்றம்பலம்.

"வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுவதும் தருவோய் நீ
வேண்டுமயன்மாற்கரியோய்நீ வேண்டியென்னைப்பணிகொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய் நானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பொருளொன்றுண்டென்னில் அதுவுமுன்றன் விருப்
[பன்றே"

பாரத கீதம்.

(முன்பக்கத் தொடர்ச்சி.)

"பாரத வீரம்"

(பூமிமெச்சிடு மண்ணுமலை என்ற மெட்டு)

(1) நற்றவப் பாரத நாட்டினர் யாமென்று
நாட்டுவோம் — துயர் — ஓட்டுவோம் — பகை
வீட்டுவோம் — இந்த
நானிலத் தோடுயர் வானிலத் தும்மினி
நண்ணுவோம் — தொழில்
பண்ணுவோம்.

(2) சாதி மதபேத மோதுவதை மூட்டை
கட்டுவோம் — மன — மொட்டுவோம் — புயம்
தட்டுவோம் — உயர்

சாத்திரம் யாவையும் பாத்தறிந்து நிதம்
சாற்றுவோம் — பொருள்
மாற்றுவோம்.

(4) கொற்றத் தடம்புய வீரர்கள் யாவரும்
கூடுவோம் — புகழ் — பாடுவோம் — களி
யாடுவோம் — மிக்க

கொள்ளையடிப்பவ ருள்ளந்திடுக்கிடக்
கூறுவோம் — மொழி
தேறுவோம்.

(4) ஓலமிடுந் திரை வேலையெங் குங்கப்பல்
ஓட்டுவோம் — சயம் — காட்டுவோம் — புகழ்
நாட்டுவோம் — பரந்

தோங்குந் திசையெங்குந் தீங்கிழைப் போர்சிரம்
ஓடவே — சென்று
சாடுவோம்.

(5) அச்சமெனுமொரு கொச்சை மொழியிங்குண்
டாகுமோ — மனம் — வேகுமோ — மகிழ்
போகுமோ — எங்கள்

ஆருயிர் போக்கிட நேரிடினும் மகிழ்
வற்றிடோம் — துயர்
பற்றிடோம்.

(தொடரும்)

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

உயர்வு.

இப்பூமியில் சாஸ்திரபூர்வத்திலும், உலகவழக்கிலும் உயர்வாகக் கொள்வது, பெருந்தவஞ் செய்தும் பலவகைப் பிறப்புக்களில் உழன்று உழன்றும் பெறுதற்கரியதான பகுத்தறிவையுடைய மானிடப்பிறப்பையே. மேலும், சுவர்க்காதி போகங்களைப் பெரியதாகக் கருதி அதற்கான கர்மாக்களைச் செய்ய, "வேண்டுவான் வேண்டுவதீவான் கண்டாய்" என்ற திருவாக்கிற்கிணங்க பக்தர்களின் விருப்பின்படி தோன்றி யருள, அவை,, ஆராவின்பமென்று அரும்பெயர் பெறினும வாரா வல்வினை வருவிக்குமே" என குவலயம்போற்றும் குமரகுருபர சுவாமிகள் கூறியவாறு, பலபுராணவாயிலாகப் பிர்மாதி தேவர்கள் பல இன்னல்களுக் காளாகிப் பின இந்நதபிறவியிற்பிறந்து உழன்றதாக அறிகிறோம். ஆதலின், என்றும் எவராலும் புகழத்தக்கதான உயர்நிலையான முத்திவீட்டைப்பெற முயலல் வேண்டும். அவ்வுயர்பதவியைச், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளை ஓர் மார்க்கமாகக் கொண்டு, சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ய மென்னும் பதவிகட்கு முறையே போய்ச்சேரக் கூடும். ஆனால் அதனிடையே பல முட்காடுகளும் அக்கினி நிறைந்த வனங்களும், துஷ்ட மிருகங்கள் பலசஞ்சரிக்கக்கூடிய புதர்களும் காணப்படும். அவைகளைக் கடந்து சாமர்த்தியமாகவே செல்வோமென்றாலும், அவைகள் தம்மையுடையாரைத், தன் வயப்படுத்திக் கொடிய நரகமாகிய தீயவழிக் காளாக்குவதில் மிக்க வல்லமை யுடையனவாக விருக்கின்றன. அவை:— காமக் குரோத லோப, மோக, மத மாச்சரியங்களே. இவை மிகத் தவச்சிரேஷ்டர்களினுடைய தவங்களையெல்லாம் கெடுத்து வீணர்களாக்கியிருக்கையில், நம்போன்றவரை யாதுசெய்யா! நம் தேசத்திலே முற்கூறியவைகளினல் பல மன்னர்களும், மற்றையரும் படாத பாட்டைப்பட்டு நாடு, நகர், பெண்டு, பிள்ளைகளையும் இழந்து உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் கஷ்டப்பட்டிருக்கும் நிலை

யைஉணர்ந்தும், உண்மை உணராதே பல துறைகளில் அறிவைச் செலுத்தி, தம்மையன்றி உலகோரையும் கெடுக்க முற்படுகின்றார்கள். என்ன விபரீதம்! யார் எதை ஆண்டால் என்ன? எதைக் கொண்டுபோனாலென்ன?. நம் நிலைமைச் சரிவர வைத்துக்கொள்வதல்லவா மனிதப்பிறப்பைப் பெற்றதின் மாண்பாகும். அவ்வாறு நடந்துகொள்ள முற்பட்டால், நாமும், நம் நாடும் உயர்நிலையையுடையதாகுமெனக் கூறும் பெரியார்களின் கொள்கைகளைக் கைக்கொள்ளக் கூடாதா? ஆயினும் பிறரை நோவதிற் பயனில்லை.

ஏனெனில், சாந்தம், தயைமுதலியவைகளை உண்டாக்கவல்லதும், இம்மைமறுமைக்காம் வழியை சுலபமாய் அறிவிக்கஆற்றல் வாய்ந்ததுமான தாயப்பாஷையிலுள்ள நூல்களின் உயர்வைஉற்று நோக்காது மேற்கூறிய சாந்தமுதலியவற்றை அளிக்காதுகோரம், கொடூரம் முதலியவற்றை அளிப்பதில் தேர்ந்த அந்நியபாஷைகளில்மோகங்கொண்டு மனம்போனவாறு நடை, உடை ஆசாரம்; அனுஷ்டானம் முதலியவைகளைக் கொண்டு காலங்கழிப்பதேயாகும். இன்னும் சிலர் தம்புராதனக் கொள்கைகளை மறந்து, தம் பெண்டிர்களுக் கமைந்துள்ள நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் வேலிகளைக்களைந்து 'கற்பு என்னும் பயிர் அழிய ஆதாரமான வழிகளிலேயே நடந்து வருகின்றார்கள். இவ்வாறெல்லாம் நடந்து வருவதின்பயனாக, இறைவன் அதிகமழை, மழையின்மை ஆகியவற்றால், அறிவு புகட்டியும் அதனையெண்ணாது "கண்டதே காட்சி கொண்டதேகோலம்" என்று அற்ப மகிழ்ச்சியால் ஆழ்ந்து தலைவனுளனென்பதை மறந்து, வாழ் நாள் வீணாளாக்குதலேநம்மவரிற் பெரும்பான்மையோரின் இயல்பாயிருத்தலைநாம் நாளும் காண்கின்றோம்.

இனியேனும், இந்நிலையிலிருந்து உய்ய வேண்டுவதற்கான நூல்களைக்கற்க முன் வரல் வேண்டும். அது இயலாவிடின் ஊர்தோறும் ஓர் சங்கங்களை ஏற்படுத்தி கல்வி கேள்விகளிற் சீரியாயார் பலரைக்கொண்டு, அரிய பிரசங்கங்களைச் செய்யச்செய்து, அதன்படியேனும் நடக்க முற்படுதல் வேண்டும் அன்றி அவ்வகை அரும் வியாசங்களைத் தாங்கி வெளிப்போந்துலாவும் பத்

திரிகைகளையாவது வாங்கி வாசித்தறிந்து ஒழுகல்வேண்டும். பல நாட்டார்களும் பத்திரிகைகளையே போற்றி விருத்தி அடைந்து வருகின்றார்கள். தற்போது, நம் நாட்டவரிற்பலர் கைக்கொண்டிருப்பது பொறாமையுடையவராய் வாய்ப்பேச்சுத்திண்ணை தூங்கித்தனத்தையே. இதைப்பன்முறை இடித்து இடித்துக் கூறினும் விழித்தபாடில்லை எனவே பலரும் கருதுகிறார்கள். ஆதலின் இதன் உண்மையை உணர்ந்து உயர்நிலை பெறுதற்கேற்ற வழிகளை ஆராய்ந்து, அவ்வழியில் தாம் நடந்துகொள்வதேயன்றித் தம் இனத்தாரையும் ஒழுகும்படிச்செய்து உலகத்தோர்க்கு ஓர் பேருபகாரியாம். உயர்நிலையைப் பெறுதற்கு முற்படும் வண்ணம் இறைவனடியை இறைஞ்சுகின்றோம். சுபம்.

தாய்மொழியை வளர்த்தல்.

(207-வது பக்கத் தொடர்ச்சி)

கா. பொது.

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ்மொழியில் இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தகைய கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம்என்றும், வேறொருசாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்படவேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது எழுத்துக்களால் எழுதிச்சேர்த்துக்கொள்ளலாம், என்றும் மற்றும் பலர் வேறு பலமாதிரியாகவும் மொழிபெயர்த்தலைப்பற்றிய கருத்துக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்; வெளியிட்டும் வருகின்றனர். இதுபற்றி ஒருவகைமுடிவு விரைவில் ஏற்பட்டேதீரும். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்ற யாற்றுநீர் தன்னொடு கலக்கும் பிறவேற்றுநீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்னரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய்மொழியாம் தண்டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்ற யாற்றுநீர்போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுளது. இதுமுப்

ணரும் கூறப்பட்டது. ஆகலின், இதனுள் வேற்றுநீர்களைப் போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்து சேருவது இயல்பே. சேரவேண்டும் என்பதுதான் நமதுவிருப்பமும் அதுதான் மொழியின் வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமேதான் பிற பேச்சு வழக்கிலுள்ள மொழிகளும் வளர்ந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக ஆங்கிலம் ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டுமொழிகளைக் கூறலாம்.

இனி, நமது மொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப்போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்தமானதே. இதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப்பெற்றுள்ள பலசிறப்பட்ட நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அதனால் நமது தாய்மொழியாந் தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தன்னகத்துக்கொள்ளும் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும் உறுதிபுறும். எனினும், இங்கு, அவையிற்றைக் குறிப்பேனாயின்; அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு காலத்தை வீணாக்கும். ஆதலின் அதனைக் குறியாது விடுகிறேன்.

ஒருமொழியிலுள்ள அரியபெரிய கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மொழி பெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழி பெயர்ப்பதினால் அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருத்தலும் வேண்டும். 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிற்றாம்.' என்ற பழமொழிக் கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து மொழிபெயர்ப்பு மொழியின் பழைய பெருமைகளை மறைத்து விடாதநிலைமையிலும் அமைதல் வேண்டும். மேலும், இங்ஙனம் மொழிபெயர்த்தல் முதலிய செய்தற்கோ தாம் மொழிபெயர்க்க முயலும் மொழிகளில் வல்லுநராகப் பலர் முன்வரல் வெண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்திலும் நாட்டின் நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையவராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும், அன்றியும், அன்னார்க்கு

உதவிபுரியப் பல மொழிகளிலும் வல்ல, பல அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத்தக்க வசதிகளுமிருத்தல்வேண்டும்.

இங்ஙனம், தத்தம் மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப்பற்றுடையார் அனைவரும் 'என் செய்வது'? என்றுளண்ணி மடிந்து வாளா இராது அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றபடி தமது முயற்சிக்குறைவினால் வந்தது எனக் கருதிப் பலர்ஒன்றுசேர்ந்தும், "தனித்தனியாகவும் இயன்ற அளவு ஒவ்வொரு துறையிலும்,' முயற்சி திருவினையாக்கும்" என்றதைக் கடைப்பிடித்து ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் உறுதியாய்உழைகக முன்வருதல் வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரைவில நீங்கிவிடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப்பின்கீழ் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சி உரையில் அறிஞர் ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. சி. ஸ்ரீநிவாஸ பிள்ளை அவர்கள் எழுதியுள்ள பகுதியும், "சேணிற்பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன்-திட்டேது தட்டேதுகாண்" என்ற பழைய தொடர்மொழியும் ஊன்றியறியத்தக்கனவாம்.

ஏன் வளர்த்தல் வேண்டும்.

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்த நிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால் உயர்ந்த நிலைமையிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடையவேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்துவம், தந்நயங்கருதாமை, சுயமதிப்பு, நடுநிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நற்குணங்கள் இருத்தல்வேண்டும். அத்தகைய நற்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில் வந்தடையக்கூடியன அல்ல அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, தக்கார்களது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ள வேண்டியதாகின்றது. இளமைப்பருவத்திற் கற்பதற்கோ தாய்மொழியே அன்றி, பிறமொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய்மொழியால் அடையும் பயனைப்போன்ற அத்துணை சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்த கால அளவிலும் அறிந்துகொள்ளுவதற்கு அவரவர்களது தாய்மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். " அறிவுடையார் எல்லாம் உடையார் " என்ற தேவர்வாக்கும் ஈண்டுச் சிந்தித்துணரற்பாலது.

வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை ?

'இதுவரையிற் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா' ? என்று கேட்பதே இதற்குப் போதிய விடையை யளிக்கும் என்பது ஒரு தலை. என்றாலும், " தாய்மொழியைப் போற்றி வளர்க்காதிருப்பது ஜாதீயத்தற்கொலையாகும் " என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக் கூறலாம்.

வளர்த்தலால் வரும் பயன் யாது?

இத்துணையும் கூறியதுகொண்டே இவ்வினாவுக்குப்பொருந்திய விடையை அறிந்துகொள்ளக்கூடும். எனினும், எடுத்துக்கொண்டதற்சேற்பச் சில சொல்லி நிறுத்துவேன். நமது மொழியைப்போலவே தற்காலத்திற்குவேண்டும் பலவற்றையும் தன்னகத்துக்கொள்ளாக்குறையைப் பெற்றிருந்த வங்கமொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிடமிருந்த அக்குறைகளினின்றும் நீங்கி இப்பொழுது நூல்வளத்தாலும் கருத்து நிறைவாலும் பிறவற்றாலும் குறைவுபடாத இந்திய மொழிகளில் ஒன்றாகவிளங்குகின்றது. அம்மொழிக்குரிய வங்காளிகளாகிய நமது (இந்திய,

நம்மாழ்வாராவரது திருச்சீர்த்தொடை.

(214-பக்கத்தொடர்ச்சி)

குருபரம்பரையில் 'சிதரன் பூமகள் சேனையர்கோன் தென்
குருகைப்பிரான்' என்று ஓரான்வழி நான்காமவராக இவரை
மதித்து, அன்பாலும் இன்பாலும் அறிவாலும் அருட்பாச்செறி
வாலும் நம் நாட்டை வளர்த்தும், ஞாயிறுந் திங்களுந் நற்கதிர்
பரப்பி மலையும் மரமும் மாண்கவின் ஓங்கிக்கொண்டல் குமுறக்
கோங்கிரை குலவக் குளநெல் செழிப்ப வின்பாப் பாடியும், 'பூவை
யும்' 'பெய்வளை' அறியும் 'ஒன்றிய' கோமளலான்' 'விநம்பி'
எனத்தொடங்கும் திருப்பாசுரங்களால் இயற்கைநிலையில் எம்
பரம்பொருளுணர்த்தியும் காட்டியும் கண்டும், "அஞ்சிறைய
மடநாராய்" என்று புள்ளைவிளித்து விளம்புவித்தும், காயமுஞ்
சீவனுந்தானே அகமும் புறமும் ஒன்றெனத் தெளிந்தும், இம்மா
றர் தமக்கு உபதேசித்த அர்த்தங்களை அடைவே எப்போதும்
மனனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீமந் நாத
முனிகள். பெரியபெருமாள் விஷயமாகப் பிரதிபாதித்த திருவாய்
மொழியைப் பன்னாள் நோற்றுப்பெற்ற அன்னை வகுளாபரணர்,
நோற்றுப்பெற்ற பிள்ளையை வளர்த்த மாதா எம்பெருமானார்;
ஞானக்கலைக்கு உத்பாதகர் பொருநைத்துறைவர், தத்வர்த்தகர்
ஸ்ரீ பெரும்பூதூருடையவர், முத்து முத்துறழ் முத்தமிழ் மொழி
யைப்பெற்றார் பாண்டிவளநாட்டோர், அதனைவளர்த்தார் தொண்
டைநாட்டுச்சான்றோர்; இவ்வாறாயிற்று ஞானஸந்தானம். இங்
கும் ஆழ்வார் அவதரித்து அவாவற்று வீடுபெற்றெழுந்தருளின
பின் பாஹ்யகுத்ருஷ்டிகளால் பாஷாகானமான திருவாய்மொழி
அபிபூதமாய் வருகின்றபடியைக்கண்டு பாஷ்யசூத்திகளால் அத
னைவிரோதித்து அதனை இதற்குக் காவலானவேலியாகக்கற்பித்து
திருவாய்மொழியைத் தன் கைவசமாக்கித் திருக்குருகைப்பிரான்
பிள்ளானைக்கொண்டு இதன் அர்த்தத்தை வெளியிடுவித்து வர்த்
திப்பித்துக்கொண்டு போந்தார் மாறனடிபணிந்துய்ந்தவர் ஆண்
டவர் இட்டபயிரை அடியவர் வர்த்திப்பித்தல்வேண்டும். இக்
காரணமாக ஸ்ரீ பாஷ்யாதிகளும் ஸ்ரீ ராமானுஜதர்சனமும் எழுந்

தன. அக்காலந்தொடங்கித்தான் ஸ்ரீ வைஷ்ணவம் தொடங்கிற்றன்று. தொன்றுதொட்டு வேதவழியே வந்தனமயும், உபய வேதங்களின் அநாதித்தன்மையும் நோக்குதல் வேண்டும். இவ் வேதங்கள் பாஷாரூபத்தால விகற்பப்படுவனபோல் தோன்றினும், அர்த்தரூபத்தால் பொருள் ஒன்றே பயக்கும்.

பூரித் துடலம் புளகித் திடப்புலமை
சிரித் துயிர் தளிர்ப்பச் சேர்ந்துருகும்—பாரித்த
முத்தமிழ்மா றன்ஞான முத்திரைக்கை கண்டுதொழு
முத்தமராய் வாழ்வா ருளம். என்றதனால்

திருவாய்மொழி முத்தமிழ் நூலென்றும்.

மெய்வேதம் போன்றதுநின் மெய்த்தமிழ்நின் மெய்த்தமிழ்யோன்
மெய்வேதமுங்காட்சி மேயதால்—வையகமென்
னுவலா காரிதரு காவீரா நின்னிகாரம்
பாவலரிங் காரோ பகர் என்றதனால்

திருவாய்மொழி வேதவழியது என்றும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் சடைப்பபிள்ளை மாறனலங்காரத்து வரைகின்றார். அஃது வேதவழியே எடுத்துரைப்பது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தமாகும். (தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

வெற்றிக்குரிய வழிகள்.

(216-வது பக்கத் தொடர்ச்சி)

உழைப்பின் சக்தியினால் அவனத்தகைப் உயர்பதவியை அடைய் வழியாயிற்று. இது முயற்சியின் பயனாலெய்திய தல்லவென எவரேனும் மறுத்தல் சாத்தியமாகுமா?

ஆயினும் பலர் இதுவினையின் செயல் என மொழிவர். இனி வினையென்பதென்ன? முற்பிறப்பிற் செய்த கர்மத்தினால் கிடைக்கு பலனே வினையெனப்படும். ஆகவே வினைக்குக் காரணம்செய்

முன்னேற முயலும் ஒரு நாட்டினரிடம் இருக்க வேண்டிய நற்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இரு பெரும்பேறுகளையும் பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலைசிறந்து விளங்கி வருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது விடாமுயற்சியின் பயனால் வளர்ந்த அவர்களது தாய்மொழி (வங்கமொழி) யின் திருந்திய பெருக்கமே அன்றி பிறிதன்று. இதனினும் மேம்பட்ட பயன் உண்டோ? இஃதன்றோ மொழிப்பற்று! இங்ஙனம் முயன்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙனமே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திர சகோதரர்களது நன்முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்துவரும் பெருமையும், ஜப்பான் மிகத்தாழ்ந்த நிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவு மேலான நிலைமைக்கு வந்த வரலாறும், பிறவும் நம்மனோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

முடிவுரை.

அறிஞர்களே! எனது புல்லறிவிற்கெட்டிய அளவு ஏதோ சில கூறினேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங்கருதினும் கைகூடுங்-காலங்கருதி இடத்தாற்செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்றுகூடி, நன்கு ஆராய்ந்து, தக்கது செய்து நமது தாய்மொழியாந் தண்டமிழைக் காலத்திற்கேற்றவாறு பலதுறைகளிலும் வளர்த்துப் பெரும்புகழ் பெறுவீர்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஊவ, சா. வேங்கடராமையர்,

கும்பகோணம்.

கையேயாகின்றது. இதனால் முயற்சியே எதற்கும் ஆதாரமாயிருக்கிறதென்றறிகிறோமல்லவா? விதியையும் உழைப்பினால் சாவித்திரி, மார்க்கண்டேயர், நளாயினி முதலியவர் நீக்கியிருக்கின்றனர்.

விடாமுயற்சியன்றி பூண்டி ஸ்ரீ. அரங்கநாத முதலியார், ஸ்ரீ. த. மாதவ ரூவ், ஸ்ரீ. அ. சேஷய்ய சாஸ்திரிகள் முதலியவர்கள் பெரும்பதவியடைந்தனர் என்பது அசாத்தியமாகும். இன்னவர்கள்யாவரும் அபாரமான உழைப்புடையவர்கள்.

இஃதின்னனமாக வேறு சிலர் "கிட்டாதாயின் வெட்டென மற" என்றதும், "முடவன் கொம்புத் தேனுக் காசைப்பட்டதுபோல்," என்பதும் பொய்யாகுமோ, முயற்சியால எதுவும் செய்யச் சாத்தியமாகாதெனச் சொல்லுவர். அப்படியல்ல. முயற்சிக்குப்பலவித அங்கங்களுள. அவைகளை கவனித்து நடப்பின் எக்காரியமும் நன்குநிறைவேறும்.

மேற்றிசையில் ஐரோப்பாக் கண்டமுழுதும் ஜெயக்கொடி நாட்டி பெரும் புகழெய்திய நெப்போலியன் என்னும் தீரன் "அசாத்தியம்" என்னும் பதம் அவிவிவேகிகளுக்குரியது, என ஒரு சமயம் உரைத்ததை எவரும் நன்றாய்ச் சிந்தித்தல் வேண்டும். அவரது செயல்யாவும் நமக்கோர் படிப்பினையாக விருத்தல் வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு சங்கீத வித்வா னிருக்கிறார். அவர் ஓர் இராகத்தைச் சுத்தமாய்ப் பாடுவதற்காக உணவு அருந்து நோம்போக பதின்மூன்று நாட்கள் தொடற்ச்சியாய்ப் பயிற்சி செய்து வந்ததை நான் பார்த்திருக்கிறேன். முடிவில் அது பிழையின்றி அவரால் பாடப்பட்டது. அது சரிவர பாடுவதற்கில்லையெனக் கருதி அவர் விட்டுவிடவில்லை.

ஒரு காரியத்தைச் செய்யப் புகுமுன்னர், பொருள், இடம் காலம், கருவி, தொழில் முதலியவைந்தையும் சிந்தித்துச் செய்ய வேண்டும். சிலர் ஆய்ந்தோய்ந்து பாராமலே, "ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு" என்பதுபோலும், கிணறு வெட்டப்பூதம்

புறப்பட்ட கதை யாகவும், காரியத்தை ஆரம்பித்துவிட்டு முடிவில் ஒரு பயனும் அடையாத தோடு தானும் கஷ்டப்படுகின்றனர்.

ஆதியில் ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வியாபாரம் செய்யவே வந்தவர்கள். எனினும் முடிவில் அவர்களடைந்ததென்ன? ஒரு ஒப்புயர்வற்றநாடு! இதற்குக் காரணம் இவர்களது முயற்சியே. எதற்கும் சலிக்காமல் முதலில் ஒருசிறுகூட்டமாய் வந்த இவர்கள் சிறிது சிறிதாய்ப் பின்பு ஊக்கம் என்னும் ஆமிர்தத்தினால் ஊராள ரவகை தேடினார்கள்.

(தொடரும்.)

தி. சு. மகாலிங்கம்.

தொண்டைமான் இளந்திரையன்.

(211-வது பக்கத்தொடர்ச்சி)

இனித் தொண்டைமாலையைச் சூடி ஆட்சிபுரிந்த தொண்டையர் நாடு பிற்காலத்துத் தொண்டை மண்டலம் எனப் பெயர் பெற்றது. இத்தொண்டை மண்டலத்தைப் பற்றிச் சில ஈண்டுக்கூற வேண்டியதாவசியகமாகலின் அதைப்பற்றிக் கூறுகின்றேன். ஆசிரியர் தொல்காப்பியனாரது ஒருசாலை மாணாக்கரான பனம்பாரனார் தமிழகத்துக் கெல்லை கூறுகின்றுழி 'வடவேங்கடந்தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' என்றார். இதனால் வடவேங்கடத்துக்கும் குமரிக்கும் இடைப்பட்ட நிலமே அவர்காலத்துத் தமிழகம் என்றதாயிற்று. இத்தமிழகம் பழங்காலந் தொட்டுச்சேரசோழ பாண்டியரான முடியுடைமன்னர் மூவராலும் ஆளப்பெற்று வந்தது. அதனால் இது சேரநாடு எனவும் சோழநாடு எனவும் பாண்டிநாடு எனவும் மூன்று பிரிவுகளையுடையதாயிற்று. இவை நாடு என்னும் பெயரான் அன்றிப் பின்னர் மண்டலம் என்னும் பெயரானும் வழங்கும். பின்பு தொண்டைமண்டலம் கொங்குமண்டலம் என்னும் பிரிவுகளுமுண்டாயின. இவைபோலவே பிறதேசங்களிலும் அனேக மண்டலங்கள் உண்டு. 1. அவை:— மைசூருக்குத் தெற்கே முமகொண்ட சோழமண்டலம். 2. பங்களூர் ஜில்லாவிற்கு வடமேற்கே விக்ரமசோழமண்டலம் 3. கோலாரும் சேலஞ்ஜில்லா வடபாகங்களுஞ் சேர்ந்த நிகரிலிசோழமண்

டலம். 4. மைசூர் சமஸ்தானத்துக்குவடக்கேஇரட்டபாடிகொண்ட சோழ மண்டலம். 5. கோலாருக்கு அப்பால் விஜயராஜேந்த்ரமண்டலம். 6. வட சர்க்காரிற் சிலபாகமாகிய கங்கைகொண்ட சோழமண்டலம் முதலியன.

இத்தொண்டை மண்டலத்திற்கு ஜயங்கொண்ட சோழமண்டலம் எனவும் கொங்குக்கு அதிராஜமண்டல மெனவும் பாண்டிக்கு ராஜ ராஜ மண்டல மெனவும் பெயர் உண்டு. இப்பெயர்கள் சோழமன்னரது ஆணை பரவிய இடைக்காலத்து அவரது வெற்றிக்கு அடையாளங்களாக ஏற்பட்டவாகும். இம்மண்டலங்கட்கு எல்லையும் அளவும்உண்டு. அவற்றுள் ஈண்டுக் கூறும் தொண்டை மண்டலத்தின் எல்லை;

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பிணுகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு." என்னும்

தனிப்பாட்டால் அறியப்படும். இம்மண்டலங்கட்கு உட்பிரிவுகள் வளநாடு, நாடு, கோட்டம், கூற்றம் என்பன. அவற்றுள் இத்தொண்டை மண்டலம் கோட்டம் நாடு என்னும் பிரிவுகளாயுள்ளது என்பதைச் கல்வெட்டுக்களால் அறிகிறோம். பல ஊர்கள் சேர்ந்து ஒரு நாடும் பல கோட்டங்கள் சேர்ந்து ஒரு மண்டலமும் ஆகும்.

கோட்டத்தின் உட்பட்ட நாடு என்பதன் உட்பிரிவாகக் கூறு என்பதொன்றும் சிறுபான்மை காணப்படுகிறது. அது 'களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டுத் தன் கூற்றுத் திருக்கழுக்குன்றம்' என்பதுகொண்டு அறியப்படும். அன்றியுந் தனியூர்களும் வளநகர்களும் உண்டு. இனி, இத்தொண்டைமண்டலம், ஆமூர்க்கோட்டம், இளங்காட்டுக்கோட்டம், ஈக்காட்டுக்கோட்டம், ஈத்தூர்க்கோட்டம் முதலிய 24 கோட்டங்களாகவும், குன்றத்தூர், மாங்காடு, பேரூர், அமரூர், கோட்டூர் முதலிய 72 நாடுகளாகவும் வகுக்கப்பட்டது. இவற்றின் விவரங்களைத் தொண்டைமண்டலசதகத்திற் கண்டுகொள்க. இத்துணைக் கோட்டங்களும் நாடுகளும் கொண்ட இத்தொண்டைமண்டலமானது பாலாற்றின் வளஞ்சுரக்கப் பெற்றது ஸ்ரீ சேக்கிழார்பெருமான் திருவாக்கானு முணர்க.

(தொடரும்)

பா. சம்பந்தமுதலியார்.

(219- வது பக்கத் தொடர்ச்சி)

வீரவாமர்:— அதுவும் போதாதென்று, கண்ணைப்பிசைந்துகொண்டு, அழ ஆரம் பிக்கின்றாய். சின்னக்குழந்தையா நீ! அடி அசடே அழாதே, அழாதே, என்று சொல்லிக் கொண்டே, கண்களைத் துடைக் கின்றார்.

மோஹனம்:—கண்களைப் பிசைந்துகொண்டே இல்லை, நீங்களே சொல்லுங்கள். ஒருநாளும் அதட்டாத நீங்கள், என்னை அதட்டுவதென்றால்......

வீரவர்மர்:— அடி பயித்தியமே அழாதே, அழாதே சொல்வதைக்கேளு. நான் ஆழ்ந்த யோஜனையில் இருக்கும்பொழுது ஏன் என்னைக்கூப்பிட்டாய் என்று கேட்டதற்குச் சண்டப்பிரசண்டமாய் ஒரு பெருத்த ராமாயணம் பாடிவிட்டாய். அதுவும் தவிர அழுது காரியத்தை சாதித்துக்கொள்கிறாய். அது கிடக்கட்டும். நீ அழுதாயேயானால் எனக்கு ஸகிக்க விலலை. எனக்கும் கண்களில் நீர் ததும்புகிறது. அதுவும் தவிர எப்போப்பட்ட மனிதராயிருந்தாலும், ஒரு பெண் அழுதாளேயானல், அவன் மனதும் கரைந்துவிடும். ஆகையால் வந்தகாரியத்தைச்சொல்லிவிட்டுப்போ.

மோஹனம்:—வேறு ஒன்றும் இல்லை. நமது குழந்தையிருக்காளே ராஜம், அவளுக்கு வருகிற ஆடியோடு 'பதின்மூன்றுகிறது. அவளுக்குக் கூடியசீக்கிரத்தில் கல்யாணம் செய்துவிடவேண்டும். என்று சொல்லத்தான் வந்தேன்.

வீரவர்மர்:—அதைப்பற்றித்தான் யோஜித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் நீ என்னைக் கூப்பிட்டாய்.

மோஹனம்:—அப்படியா! பின்னை என்னைக்கோபிப்பதற்குக் காரணம் இருக்கின்றது. என்னை மன்னியுங்கள்.

வீரவர்மர்:—அதெல்லாம் ஸரிதான் கலியாணம் செய்யவேண்டிய தவசியம் தான். இதற்காகவே நான் அனேகம் பிரபுக்களுடைய புத்திரர்களின் படங்களையும், வரவழைத்துப் பார்த்தேன். ஒன்றும் நமது கருத்துக்கிசைந்தபடியில்லை. கடைசியில் இவ்வூரிலேயே இரண்டுவரங்கள் கிடைத்தன, அதுவும் நமது ராஜத்தின் ஜாதகத்திற்கும் பொருத்தமாயிருக்கின்றது. ஆகையினாலேதான், சற்று விசாரமற்று இருக்கின்றேன்.

மோஹனம்;— பேஷ்! பேஷ்! வெகு நன்றாய் இருக்கிறது. 'பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் பால்' ஆய்விட்டது. மதுபேரில் கடவுளுக்கு இரக்கம்தான். அப்படியானால் அந்தப்பையன்கள் யார் சிக்கிரம் சொல்லுங்கள்.

வீரவர்மர்:— எல்லாம் சொல்லுகிறேன். அவசரப்படாமல், சற்று நிதானமாய்க்கேட்டு, உனது அபிப்ராயத்தையும் சொல்லு. பையன்கள் இருவரும் இவ்வூர்தான். ஒன்று நமது நரேந்திரவர்மர் புத்திரன். மற்றொன்று அந்த மஹேந்திரவர்மர் மகன். இரண்டு பையன்களும், இவ்வருஷம் பி. ஏ. பட்டம் பாஸ் பண்ணிவிட்டார்கள். வயது இருபத்திரெண்டுதான் ஆகிறது. இருவரில் நரேந்திரவர்மர் அவ்வளவு பணக்காரரல்ல.

மோஹனம்:—அப்படியானால் அது பிரயோஜனமில்லை. இக்காலத்தில் பணமில்லாவிட்டால், மனிதனுக்குப் பெருமையில்லை. எல்லாச்சுகத்திற்கும் பணம்தானே காரணம். அப்பொருளை இச்சில்லாதவர் பிரயோஜமமில்லை. "பணமில்லாதவன் பிணம்" என்றபடி பணமில்லாவிடில், ஒரு சிறப்பும் இல்லை. அல்லாமலும் "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்." பொருளால் இவ்வுலகத்திலும், வேறு உலகத்திலும் உயர்வை அடையலாம். பணமில்லாதவன் பதருக்கே ஸமானமானவன். ஆகையால் அது வேண்டாம். மற்றொன்றைச் சொல்லுங்கள். (தொடரும்)

G. A. சாஸ்திரி.

பொதுக்குறிப்புகள்.

நமது நகர்:—திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் குருமூர்த்தியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டாரசன்னதிகளின் குருபூசையை நிகழ்ந்த 13—4—25-ல் வெகு சிறப்பாகமேற்படி ஆதினகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ வைத்திலிங்கதேசிக பண்டாரசன்னதி அவர்கள் நடத்தினார்கள். அவ்வமயம் ஸ்ரீ மகாலிங்கப்பெருமானின் தெரிசனார்த்தமாகத் தங்கியிருந்த ஸ்ரீமான் மெ. லெ. மெ இராமநாதஞ்செட்டியார் அவர்களைத் தக்க மனுஷ்யர்களைக்கொண்டு குருமூர்த்தி தெரிசனைக்கு வரவேண்டுமென்று அழைக்க அவ்வாறே, ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் சென்று, குருபூஜாவைபவத்தைக் கண்டுகளித்து வந்தமை மிகவும் பாராட்டற்பாலதே! இதிலிருந்தே ஸ்ரீமகாலிங்கப் பெருமான் திருவருளால் இவர்களுக்குள் அன்னியோன்னியபாவம் மேலிட்டு ஈசுவர கைங்கரியத்தைக் குறைவற நிறைவேற்றித் திருவருளுக்குப் பாத்திரராகும்வண்ணம் இறைவனை இறைஞ்சுகிறோம்.

நமது நகர் யூனியின் போர்டு:—அதில் மெம்பர் ஸ்தானங்களுக்கும், தலைமை வகிப்பதற்கும் பலர் விரும்பி பாடுபட்டபோதிலும், நம் நகரார் தக்க மெம்பர்களுக்கே ஓட்செய்தனர். அதற்கேற்ப மெம்பர்களால் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஸ்ரீமான் மு. கோவிந்தபிள்ளை அவர்களும் நமது நகரின் பரிசுத்தத்தையும், முன்னேற்றத்தையும் கருதி ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானின் ஜோதியிலேயே உட்பட்டிருந்த தீபங்களையெல்லாம் காலத்தில் பிரகாசமுடன் விளங்கச்செய்துவருவதும் தற்போது அதிகாலையிலேயே தெருவிலுள்ள குப்பைமுதலியதை அப்புறப்படுத்தி நாகரிகத்துடன் நடத்திவருவதும்பற்றி பொதுநலப்பிரியரான ஷை பிள்ளையவர்களை யாவரும் புகழுரையாடுகிறார்கள்.

நம் குணநிதிக்கு இரண்டாவதாண்டு பிறந்துவிட்டதால் இனி வரும் ஆடிமீ முதல் பலர் விரும்பியவண்ணமே காகிதரூபமாகவே பல கட்டுரைகளுடன் பிரசுரிக்க உத்தேசித்திருப்பதுடன் சந்தா ரூ. 1-8-0 யாக ஏற்படுத்தி மாதம் இருமுறையாக நடத்தப்போவதால் ஆடிமீ 30உக்குள் சந்தா அனுப்பும் மெம்பர்களுக்குமட்டும் மணியார்டர் செலவை நீக்கி சந்தா ரூ. 1—6—0 பெற்று 1—8—0யாக வரவுவைத்துக்கொள்ளப்பெறும் என்பதையும், அறிவித்துக்கொள்வதுடன் தாங்கள் ஆதரித்து உற்சாகமூட்டி வருவதேபோல் தங்கள் நண்பர்களையும் குணநிதியுடையவராகச்செய்து முன்னேற்றமுறும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கும்பகோணத்திலிருந்து சிறிது காலமாய் வெளிக்காட்டி வரும் பாரதமித்திரன் 4-5-25ல்பிரசுரமான 1 கோவை 8 மணியின் 5வது பக்கம் 2 வது கலத்தில் "தும்பகோணம் ஸ்மால்காஸ் கோர்ட் 1925௵ த்ய

619 நம்பரின் வியாஜ்ய முடிவு எனத் தலையங்கமிட்டு ” ஷை வியாஜ்யதின் சாரமென மனம்போனவாறு நம்மையும், ஷை நம்பருக்கு சாட்சியாக வந்துத்தான்னறித்தவரை உண்மையே கூறிய ஸ்ரீமான் R. கோபாலையரவர்களையும் பிதற்றியிருப்பதை கோர்ட்டு திறந்தவுடன் தக்கஆதாரவுடனே நாமும், ஷை ஐயரவர்களும் பாரதமித்திரன் பத்திராதிபர்மீதும், அதுசம்பந்தபட்டவர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமென்பதைஅறிக்கை செய்கிறோம். மேலும், இப்பத்திரிகையில் பிரசுரமான பல அபாண்டவிஷயங்களைப்பற்றி கடிதங்களும் வந்துள, இதன் பின்னர் வெளியிடுதலே உசிதமெனவெண்ணி வெளியிடாது இனி நேரில் மறுசஞ்சிகையில் வெளிவரும். அதுசம்பந்தப்பட்டவர்கள் அதுவரைப் பொறுமையைக் கைக்கொள்வார்களாக.

திருமங்கலக்குடி.

சரஸ்வதி விலாஸ சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவதாண்டு நிறைவுவிழா 6-5-25 திருவையாறு சமஸ்கிருத காலேஜ் தமிழ்ப்போதகாசிரியார் பிர்ம்ம ஸ்ரீ M. S. சந்தானமையங்கார் அவர்களின் தலைமையின்கீழ் பலவித்வான்கள் அரிய விஷயங்களை உபன்னியசிக்க இனிதே முடிவுற்றது.

மேலும் இதன் பக்க ஊர்களில் பல பிரமுகர்களால் ஏற்படுத்திய சபைகளெல்லாம் சென்ற இரண்டு ஆண்டுகளாக வருடோத்சவம் செய்ய ஆரம்பித்தால் வரவு செலவுகணக்கு வெளியிட வேண்டிவருமே என்பதையும், இன்னும் பலகாரணங்களையும் கொண்டு நடத்தாதிருந்து வரும் நிலையில் பாலியர்களையே அங்கமாகக்கொண்ட இச்சபைசெவ்வனே நடைபெற்று வருவதைப்பற்றி மிகமகிழ்வதுடன், இவ்விஷயத்தில் விடாமுயற்சியாக நின்று நடத்திய சபைகாரியதரிசி திருவாளர் குப்புசாமி என்பார் சகல பாக்கியமும் பெற்று, தமிழபிவிருத்தியை நாடி முன்னேற்ற முற்று வாழ்வாராக

தருமபுரம் ஆதீனத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட திருக்கடவூர், சீகாழி திருவையாறு முதலிய திவ்ய தலங்களின் சைத்ரோத்சவம் நடத்தியபோதிலும், போதுமான ஐவேஜியுடையதும், சமயாசாரியர்களால் பாடப்பெற்றதுமான குற்றாலம் உத்தரவேதீசுவர சுவாமியின் பிர்மோத்சவத்தை நிறுத்திய குறையையே எங்கும் உரையாடுதலைக்கேட்டு விசனிக்கிறோம்.

சூரியனார்கோவில் ஆதீனம் ஆதிகுருமூர்த்தியாகிய சிவாக்கிரயோகீந்திரஸ்வாமிகளின் குருபூஜை ஷை ஆதீனகர்த்தர் அவர்களால் திருப்பணந்தாள் ஆதீனகர்த்தர்களின் பொருளுதவியைக்கொண்டு 26 - 4 - 25 வெகு விமரிசையாய் நடத்தியதுடன், அன்றிரவு பட்டினபிரவேசமும் நடைபெற்றது.